## காலை அழகு

வெள்ளி முளைப்பினிலே – அழகு
துள்ளுது வான்பரப்பில்! – சிறு
புள்ளின ஓசையிலே – அழகு
பொங்கி வழியுதடி!

காலைப் பிறப்பினிலே – அழகு
கண்ணைக் கவருதடி! – சிறு
சோலைக் கலகலப்பில் – அழகு
சொரியுது உள்ளத்திலே!

சேவல் அழைப்பினிலே – அழகு
சிந்தையை அள்ளுதடி! – மன
ஆவல் அழித்துவிட்டால் – அழ
கானது நம்முடைமை!

தாமரை மொட்டுக்குள்ளே – அழகு
தங்கிக் கிடக்குதடி! – கதிர்
சாமரை வீச்சினிலே – விரிந்து
சஞ்சலம் போக்குதடி!

வீடு துலக்கும்பெண்கள் – குளிர்முகம்
வீசும் ஒளியழகில் – வான்
நாடு விட்டுநகரும் – முழுமதி
நாணி முகம்வெளுத்தே!

- **கவிஞர் வாணிதாசன்**



## காலை அழகு

வெள்ளி முளைப்பினிலே – அழகு
துள்ளுது வான்பரப்பில்! – சிறு
புள்ளின ஓசையிலே – அழகு
பொங்கி வழியுதடி!

காலைப் பிறப்பினிலே – அழகு
கண்ணைக் கவருதடி! – சிறு
சோலைக் கலகலப்பில் – அழகு
சொரியுது உள்ளத்திலே!

சேவல் அழைப்பினிலே – அழகு
சிந்தையை அள்ளுதடி! – மன
ஆவல் அழித்துவிட்டால் – அழ
கானது நம்முடைமை!

தாமரை மொட்டுக்குள்ளே – அழகு
தங்கிக் கிடக்குதடி! – கதிர்
சாமரை வீச்சினிலே – விரிந்து
சஞ்சலம் போக்குதடி!

வீடு துலக்கும்பெண்கள் – குளிர்முகம்
வீசும் ஒளியழகில் – வான்
நாடு விட்டுநகரும் – முழுமதி
நாணி முகம்வெளுத்தே!

\- **கவிஞர் வாணிதாசன்**

**எதுகை :**

- வெள்ளி – புள்ளி
- காலைப் – சோலைக்
- சேவல் – ஆவல்
- தாமரை – சாமரை
- வீடு – நாடு

**மோனை :**

- புள்ளின – பொங்கி
- **கா**லைப் – **க**ண்ணைக்
- **சோ**லை - **சொ**ரியுது
- **சே**வல் – **சி**ந்தையை
- **ஆ**வல் – **கா**னது
- **தா**மரை – **த**ங்கிக்
- **சா**மரை – **ச**ஞ்சலம்
- **வீ**டு – **வீ**சும்
- **நா**டு – **நா**ணி

**சந்தம் :**

- காலைப் – சோலைக்
- சேவல் – ஆவல்
- தாமரை – சாமரை
- வீடு – நாடு

**இயைபு :**

- கிடக்குதடி – போக்குதடி

**சொல் நயம் :**

- வெள்ளி முளைப்பினிலே
- துள்ளுது வான்பரப்பில்
- புள்ளின ஓசையிலே
- பொங்கி வழியுதடி
- சோலைக் கலகலப்பில்
- சொரியுது உள்ளத்திலே
- சிந்தையை அள்ளுதடி
- அழகு தங்கிக் கிடக்குதடி
- சாமரை வீச்சினிலே
- சஞ்சலம் போக்குதடி
- குளிர்முகம் வீசும் ஒளியழகில்
- வான் நாடுவிட்டு நகரும்

| **பாடுபொருள்** | இயற்கை |
|---|---|
| **மையக்கரு** | காலைப் பொழுதின் அழகு |

**அணிநயம் :**

**பின்வருநிலை அணி**

- *அழகு – அழகு*

**திரிபு அணி**

- *சேவல் – ஆவல்*
- *தாமரை – சாமரை*
- *வீடு – நாடு*

**தற்குறிப்பேற்ற அணி**

- *முழுமதி நாணி முகம்வெளுத்தே*
- *கதிர் சாமரை வீச்சினிலே*
- *சேவல் அழைப்பினிலே*

**உருவக அணி**

- *வான் நாடு விட்டுநகரும்*

**தன்மை நவிற்சி அணி**

*தாமரை மொட்டுக்குள்ளே – அழகு தங்கிக் கிடக்குதடி*

**சுவை அணி**

*சோலைக் கலகலப்பில் – அழகு சொரியுது உள்ளத்திலே!*

**பொருள் நயம்**

**தெரிபொருள்:**

காலைப் பொழுதின் அழகு இரசித்து இன்புறத்தக்கது

**புதைபொருள் :**

இயற்கையோடு இயைந்து அதனைப் போற்றி வாழ்வது அவசியம்

# கவிதை பாகம் 1 - தேர்வு அணுகுமுறை

சேவல் அழைப்பினிலே – அழகு
சிந்தையை அள்ளுதடி! – மன
ஆவல் அழித்துவிட்டால் – அழ
கானது நம்முடைமை!

தாமரை மொட்டுக்குள்ளே – அழகு
தங்கிக் கிடக்குதடி! – கதிர்
சாமரை வீச்சினிலே – விரிந்து
**சஞ்சலம் போக்குதடி**!

\- **கவிஞர் வாணிதாசன்**

- **விடையை முழு வாக்கியமாக எழுதத் தேவையில்லை.**
- **கலைத்திட்டத்தில் வரையறுக்கப்பட்ட பாடுபொருள்/ மையக்கரு மட்டும்தான் எழுத வேண்டும்.**



1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது? (2 புள்ளி)

**விடை :** காலைப் பொழுதின் அழகு

2. இக்கவிதை கண்ணிகளில் காணப்படும் **நயங்கள்** இரண்டனை எழுதுக. (4 புள்ளி)

**விடை :**
எதுகை : சேவல் – ஆவல்
தற்குறிப்பேற்ற அணி : "சேவல் அழைப்பினிலே – அழகு
சிந்தையை அள்ளுதடி!"

- **நயங்கள்** எனப் பொதுவாக இருந்தால் ஓசைநயம், அணிநயம், சொல் நயம், பொருள் என எதுவாகினும் எழுதலாம்.
- **எதுகை/ மோனை** எடுத்துக்காட்டுகளுக்கு வட்டமிட்டு/ கோடிட்டுக் காட்ட மறவாதீர்.

3. (i) **சஞ்சலம் போக்குதடி** என்பதன் பொருள் யாது? (2 புள்ளி)

**விடை :** மனக் கலக்கம் நீங்குதல்

கவிதை விளக்கும் பொருளை எழுத வேண்டும்

(ii)

சேவல் அழைப்பினிலே – அழகு
சிந்தையை அள்ளுதடி! – மன
ஆவல் அழித்துவிட்டால் – அழ
கானது நம்முடைமை!



கொடுக்கப்பட்டுள்ள கவிதை அடிகளிலிருந்து விடையை அடையாளம் கண்டு எழுத வேண்டும்.

இவ்வடிகளில் நம் வாழ்க்கை இன்பமாக அமைய கவிஞர் கூறும் **அறிவுரை** என்ன?

**விடை :** இயற்கையை நாம் விருப்பு வெறுப்பின்றி அணுக வேண்டும்.

## கவிதைப் பயிற்சி :

வெள்ளி முளைப்பினிலே – அழகு
துள்ளுது வான்பரப்பில்! – சிறு
**புள்ளின ஓசையிலே** – அழகு
பொங்கி வழியுதடி!

காலைப் பிறப்பினிலே – அழகு
கண்ணைக் கவருதடி! – சிறு
சோலைக் கலகலப்பில் – அழகு
சொரியுது உள்ளத்திலே!

- **கவிஞர் வாணிதாசன்**

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **பாடுபொருள்** யாது? (2 புள்ளி)
2. இக்கவிதை கண்ணிகளில் காணப்படும் **ஓசை நயங்கள்** இரண்டனை எழுதுக. (4 புள்ளி)
3. (i) **புள்ளின ஓசையிலே** என்பதன் பொருள் யாது? (2 புள்ளி)

(ii)

காலைப் பிறப்பினிலே – அழகு
கண்ணைக் கவருதடி! – சிறு
சோலைக் கலகலப்பில் – அழகு
சொரியுது உள்ளத்திலே!

இவ்வடிகளில் மனத்திற்கு ஏன் மகிழ்ச்சி ஏற்படுகிறது எனக் கவிஞர் கூறுகிறார்? (2 புள்ளி)

**விடைகள்:**

## கவிதை பாகம் 2 - தேர்வு அணுகுமுறை

### வினா 10 :

- முழு வினா ( 20 புள்ளி )
- 2 வகையில் வினா தொடுக்கப்படலாம்

வகை 1 : கவிதையின் <u>தெரிநிலைக்கருத்துகளை</u> விளக்கி எழுதுக.

- கொடுக்கப்பட்ட <u>அனைத்துக்</u> கண்ணிகளின் <u>தெரிநிலைக்கருத்துகளையும்</u> விளக்கி எழுத வேண்டும்
- புதைநிலைக்கருத்துகளை எழுதத் தேவையில்லை.

வகை 2 : கவிதையின் <u>கருத்துகளை</u> விளக்கி எழுதுக.

- கொடுக்கப்பட்ட <u>அனைத்துக்</u> கண்ணிகளின் <u>தெரிநிலைக்கருத்துகளையும்</u> விளக்கி எழுத வேண்டும்
- குறைந்தது <u>ஒரு புதைநிலைக்கருத்தை</u> எழுத வேண்டும்

- <u>முன்னுரை, கருத்து, முடிவுரை</u> எனப் பத்திப் பிரித்து கட்டுரையை எழுத வேண்டும்.
- முன்னுரையில் எழுத வேண்டியவை:
  - கவிஞர் பெயர்
  - கவிதை பெயர்
  - பாடுபொருள்/ மையக்கரு
  - தலைப்பைத் தொட்டு வாக்கியம்
  - முடிவுரையில் எழுத வேண்டியவை: கவிதையை ஒட்டிய சொந்தக் கருத்து

### வினா 11 :

- உடைக்கப்பட்ட வினா
  - (i) கவிதையில் காணும் **நயங்களை** விளக்குதல்
    (ஓசைநயம், அணிநயம் சொல்நயம், பொருள்நயம்) - 10 புள்ளி
  - (ii) கவிதையின் **தாக்கம்/ படிப்பினை/ கருத்துணர் பகுதியை** விளக்குதல் - 10 புள்ளி
- 10 புள்ளி என்பதால் முன்னுரை, முடிவுரை எழுதத் தேவையில்லை.
- 3 பத்திகள் எழுத வேண்டும்
- ஒரு பத்தியில் எழுத வேண்டியவை:

**ஓசைநயம் :**
- எதுகை
- பொருள்
- எ.காட்டு
- விளக்கம்

**அணிநயம்:**
- அணி வகை
- பொருள்
- எ.காட்டு
- விளக்கம்

**தாக்கம் :**
- கருத்து
- உணர்வு
- தீர்வு

**படிப்பினை :**
- படிப்பினை
- விளக்கம்
- வலியுறுத்தும் வாக்கியம்

**வினா 10 (மாதிரி 1):**
**காலை அழகு கவிதையின் <u>தெரிநிலைக் கருத்துகளை</u> விளக்கி எழுதுக. (20 புள்ளி)**



கவிதையின் **எல்லாக் கண்ணிகளையும்** விளக்கி எழுத வேண்டும்.
- முன்னுரை + கருத்து + முடிவுரை

கவிதையுலகில் தனக்கென முத்திரை பதித்திருப்பவர் **கவிஞர் வாணிதாசன்.** இவரது கைவண்ணத்தில் உருவானதே **'காலை அழகு'** எனும் கவிதையாகும். இக்கவிதை, **இயற்கை** எனும் பாடுபொருளைக் கொண்டுள்ளது. <u>காலைப் பொழுதின் அழகினைக் கவிஞர் தனது கவிதைத் தூரிகையால் சிறப்புற நம்மிடம் சமர்ப்பித்துள்ளார்.</u>

**வெள்ளி முளைப்பினிலே** – அழகு
துள்ளுது **வான்பரப்பில்**! – சிறு
**புள்ளின** ஓசையிலே – அழகு
பொங்கி வழியுதடி!

| சொற்பொருள் விளக்கம் | |
|---|---|
| வெள்ளி முளைப்பினில் | பொழுது விடியும் வேளையில் |
| வான்பரப்பில் | வான் வெளியில் |
| புள்ளின | பறவைகளின் |

அதிகாலைப் பொழுதில் வெள்ளி (சுக்கிரன்) நட்சத்திரத்தின் ஒளி, இருண்டிருக்கும் காலை வானத்தைப் பிரகாசமாய்க் காட்சியளிக்கச் செய்கிறது. அவ்வினிய வேளையிலே புள்ளினங்களான சிறு பறவைகளும் தமது காலைக் கடமைகளை ஆற்ற கூட்டைவிட்டுப் பறக்கின்றன. நிசப்தமான அந்த வேளையில் பறவைகள் எழுப்பும் ஒலி, காலைப் பொழுதின் அழகுக்கு மேலும் அழகு சேர்க்கிறது என்ற கவிஞரின் வருணனை நம்மையும் இரசிக்கச் செய்கிறது.

காலைப் பிறப்பினிலே – அழகு
கண்ணைக் **கவருதடி**! – சிறு
சோலைக் கலகலப்பில் – அழகு
**சொரியுது** உள்ளத்திலே!

| சொற்பொருள் விளக்கம் | |
|---|---|
| கவருதடி | ஈர்க்கின்றன |
| சொரியுதடி | பொழியுது |

மேலும், காலைப் பொழுது பிறப்பெடுத்தவுடன் சோலைவனங்கள் நமது கண்களைக் காந்தம் இரும்பைக் கவர்வது போல வெகுவாக ஈர்க்கின்றன என்கிறார் கவிஞர். மொட்டு விரித்துப் பூத்துக் குலுங்கும் பல வண்ணப் பூக்களின் தேனை உறிஞ்சவரும் வண்டுகளின் ரீங்காரமும் சிறு பூச்சிகளின் ஓசையும் சோலையில் கலகலப்பை உண்டாக்குகின்றன என்கிறார் கவிஞர். அவற்றின் ஆரவாரம் மனத்தில் இன்பத்தைச் சுரக்க வைக்கின்றன என்றும் கவிஞர் புகழாரம் சூட்டுகிறார்.

சேவல் அழைப்பினிலே – அழகு
**சிந்தையை அள்ளுதடி**! – மன
**ஆவல்** அழித்துவிட்டால் – அழ
கானது **நம்முடைமை**!

| சொற்பொருள் விளக்கம் | |
|---|---|
| சிந்தையை | எண்ணத்தை |
| ஆவல் | ஆசை |
| நம்முடைமை | நமக்குச் சொந்தம் |

தொடர்ந்து, காலைப் பொழுதில் தனது கடமையைச் செவ்வனே செய்ய சேவலும் தவறுவதில்லை. சொப்பனத்தில் மூழ்கிக் கிடப்போரை எழச் செய்யும் சேவலின் ஒய்யார கொக்கரிப்பு காலைப் பொழுதின் அழகுக்கு மகுடம் சூட்டுகிறது என்கிறார் கவிஞர். அதே வேளையில், மனித மனம் நிலையாக இல்லாமல் கடலலையாய்த் திரியும் பொழுது அங்கு வீணான ஆசைகள் தோன்றுகின்றன. நாம் நமது மன ஆசைகளைக் கட்டுப்படுத்தி இயற்கை அன்னையின் அருட்கொடைகளை விருப்பு வெறுப்பன்றி அணுகினால் இயற்கையின் அழகை அமுதமென அள்ளிப் பருகலாமெனக் கவிஞர் நயமாக எடுத்துரைக்கிறார்.

தாமரை மொட்டுக்குள்ளே – அழகு
**தங்கிக் கிடக்குதடி**! – **கதிர்**
**சாமரை வீச்சினிலே** – விரிந்து
**சஞ்சலம் போக்குதடி**!

| சொற்பொருள் விளக்கம் | |
|---|---|
| தங்கிக் கிடக்குதடி | பொதிந்து கிடக்கும் |
| கதிர் சாமரை வீச்சினிலே | சூரிய ஒளிக்கதிர்கள் படர்கையிலே |
| சஞ்சலம் போக்குதடி | கலக்கம் நீக்குதடி |

இதுமட்டுமல்லாது, தாமரை மொட்டில் பொதிந்து கிடக்கும் அழகினையும் கவிஞர் நம் பார்வைக்குக் கொண்டு வருகிறார். இரவின் பனித்துளிகளால் அர்ச்சிக்கப்பட்ட தாமரை மொட்டுகள் காலைப் பொழுதில் சூரியனின் வருகைக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கின்றன. குழந்தையை அரவணைக்கும் தாயைப் போல சூரியன் தனது ஒளிக்கதிர்களால் பனித்துளிகளை நீக்க, தாமரை மொட்டுகள் தமது சிவந்த இதழ்களை விரித்து மலர்ந்த மலர்களாகக் காட்சி அளிக்கின்றன. இத்தகு எழில் காட்சியைக் காணும் நமக்கு மனக்கலக்கங்கள் நீங்குவது உறுதி எனக் கவிஞர் அறுதியிட்டுக் கூறுகிறார்.

வீடு **துலக்கும்**பெண்கள் – குளிர்முகம்
வீசும் **ஒளியழகில்** – வான்
நாடு விட்டுநகரும் – **முழுமதி**
**நாணி முகம்வெளுத்தே**!

| சொற்பொருள் விளக்கம் | |
|---|---|
| துலக்கும் | சுத்தம் செய்யும் |
| ஒளியழகில் | பொலிவில் |
| முழுமதி | முழு நிலா |
| நாணி முகம்வெளுத்தே | வெட்கப்பட்டு மறைதல் |

காலைப் பொழுதின் அழகின் உச்சக்கட்டமாகத் திகழ்வது வீட்டைச் சுத்தம் செய்யும் பெண்களே எனக் கவிஞர் புகழாரம் சூட்டுகிறார். அதிகாலையில் எழுந்து பொறுப்புடன் வீட்டைச் சுத்தம் செய்யும் பெண்களின் முகங்கள் பொலிவாகக் காணப்படுகிறன. அம்முகங்களின் பொலிவுக்குத் தான் ஈடாக முடியாது எனக் கருதிய வானில் உலவும் நிலவும்கூட வெட்கப்பட்டு மறைகிறது எனக் கவிஞர் காலைப் பொழுதின் அழகை எடுத்தியம்பும் அதே வேளையில் நமது பண்பாட்டு நெறியையும் பதியம் செய்ய தவறவில்லை.

ஆகவே, விண்ணிலும் மண்ணிலும் நிரம்பி வழியும் இயற்கையின் அன்னையின் அருட்கொடைகளை நாம் இரசித்து வாழப் பழக வேண்டும். அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் இயற்கையைவிட்டு நழுவி செயற்கை பக்கம் சென்றுவிட்ட மனிதன் மீண்டும் இயற்கையோடு இயைந்து வாழ வேண்டியது அவசியமாகும். அப்பொழுதுதான் வாழ்க்கையின் இன்பத்தைத் துய்க்க முடியும்.

**முடிவுரை : சொந்தக் கருத்து**



**வினா 10 (மாதிரி 2):**
**காலை அழகு கவிதையின் <u>கருத்துகளை</u> விளக்கி எழுதுக.**



**கருத்து =**
**தெரிநிலைக் கருத்து + புதைநிலைக் கருத்து**

கவிதையுலகில் தனக்கென முத்திரை பதித்திருப்பவர் **கவிஞர் வாணிதாசன்.** இவரது கைவண்ணத்தில் உருவானதே **'காலை அழகு'** எனும் கவிதையாகும். இக்கவிதை, **இயற்கை** எனும் பாடுபொருளைக் கொண்டுள்ளது. <u>காலைப் பொழுதின் அழகினைக் கவிஞர் தனது கவிதைத் தூரிகையால் சிறப்புற நம்மிடம் சமர்ப்பித்துள்ளார்.</u>

அதிகாலைப் பொழுதில் வெள்ளி (சுக்கிரன்) நட்சத்திரத்தின் ஒளி, இருண்டிருக்கும் காலை வானத்தைப் பிரகாசமாய்க் காட்சியளிக்கச் செய்கிறது. அவ்வினிய வேளையிலே புள்ளினங்களான சிறு பறவைகளும் தமது காலைக் கடமைகளை ஆற்ற கூட்டைவிட்டுப் பறக்கின்றன. நிசப்தமான அந்த வேளையில் பறவைகள் எழுப்பும் ஒலி, காலைப் பொழுதின் அழகுக்கு மேலும் அழகு சேர்க்கிறது என்ற கவிஞரின் வருணனை நம்மையும் இரசிக்கச் செய்கிறது.

மேலும், காலைப் பொழுது பிறப்பெடுத்தவுடன் சோலைவனங்கள் நமது கண்களைக் காந்தம் இரும்பைக் கவர்வது போல வெகுவாக ஈர்க்கின்றன என்கிறார் கவிஞர். மொட்டு விரித்துப் பூத்துக் குலுங்கும் பல வண்ணப் பூக்களின் தேனை உறிஞ்சவரும் வண்டுகளின் ரீங்காரமும் சிறு பூச்சிகளின் ஓசையும் சோலையில் கலகலப்பை உண்டாக்குகின்றன என்கிறார் கவிஞர். அவற்றின் ஆரவாரம் மனத்தில் இன்பத்தைச் சுரக்க வைக்கின்றன என்றும் கவிஞர் புகழாரம் சூட்டுகிறார்.

தொடர்ந்து, காலைப் பொழுதில் தனது கடமையைச் செவ்வனே செய்ய சேவலும் தவறுவதில்லை. சொப்பனத்தில் மூழ்கிக் கிடப்போரை எழச் செய்யும் சேவலின் ஒய்யார கொக்கரிப்பு காலைப் பொழுதின் அழகுக்கு மகுடம் சூட்டுகிறது என்கிறார் கவிஞர். அதே வேளையில், மனித மனம் நிலையாக இல்லாமல் கடலலையாய்த் திரியும் பொழுது அங்கு வீணான ஆசைகள் தோன்றுகின்றன. நாம் நமது மன ஆசைகளைக் கட்டுப்படுத்தி இயற்கை அன்னையின் அருட்கொடைகளை விருப்பு வெறுப்பன்றி அணுகினால் இயற்கையின் அழகை அமுதமென அள்ளிப் பருகலாமெனக் கவிஞர் நயமாக எடுத்துரைக்கிறார்.

இதுமட்டுமல்லாது, தாமரை மொட்டில் பொதிந்து கிடக்கும் அழகினையும் கவிஞர் நம் பார்வைக்குக் கொண்டு வருகிறார். இரவின் பனித்துளிகளால் அர்ச்சிக்கப்பட்ட தாமரை மொட்டுகள் காலைப் பொழுதில் சூரியனின் வருகைக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கின்றன. குழந்தையை அரவணைக்கும் தாயைப் போல சூரியன் தனது ஒளிக்கதிர்களால் பனித்துளிகளை நீக்க, தாமரை மொட்டுகள் தமது சிவந்த இதழ்களை விரித்து மலர்ந்த மலர்களாகக் காட்சி அளிக்கின்றன. இத்தகு எழில் காட்சியைக் காணும் நமக்கு மனக்கலக்கங்கள் நீங்குவது உறுதி எனக் கவிஞர் அறுதியிட்டுக் கூறுகிறார்

காலைப் பொழுதின் அழகின் உச்சக்கட்டமாகத் திகழ்வது வீட்டைச் சுத்தம் செய்யும் பெண்களே எனக் கவிஞர் புகழாரம் சூட்டுகிறார். அதிகாலையில் எழுந்து பொறுப்புடன் வீட்டைச் சுத்தம் செய்யும் பெண்களின் முகங்கள் பொலிவாகக் காணப்படுகிறன. அம்முகங்களின் பொலிவுக்குத் தான் ஈடாக முடியாது எனக் கருதிய வானில் உலவும் நிலவும்கூட வெட்கப்பட்டு மறைகிறது எனக் கவிஞர் காலைப் பொழுதின் அழகை எடுத்தியம்பும் அதே வேளையில் நமது பண்பாட்டு நெறியையும் பதியம் செய்ய தவறவில்லை.

<u>இக்கவிதையில் கவிஞர் சில **புதைநிலைக் கருத்துகளையும்** பதிவிட்டுள்ளார். இன்றைய அவசர உலகில் இயந்திரத் தன்மையும் பரபரவெனச் செயலாற்றிக் கொண்டிருக்கும் மனிதர்களுக்கு மன இறுக்கம் ஏற்படுவது இயல்பே. இத்தகைய மன இறுக்கத்தைப் போக்கும் அருமருந்தாக இயற்கை விளங்குகிறது. தாயைப் போல அரவணைக்கும் இயற்கையை முறையாகப் பயன்படுத்திக் கொள்வது நமது கையில்தான் உள்ளது.</u>

ஆகவே, விண்ணிலும் மண்ணிலும் நிரம்பி வழியும் இயற்கையின் அன்னையின் அருட்கொடைகளை நாம் இரசித்து வாழப் பழக வேண்டும். அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் இயற்கையைவிட்டு நழுவி செயற்கை பக்கம் சென்றுவிட்ட மனிதன் மீண்டும் இயற்கையோடு இயைந்து வாழ வேண்டியது அவசியமாகும். அப்பொழுதுதான் வாழ்க்கையின் இன்பத்தைத் துய்க்க முடியும்.

**வினா 11: (i) காலை அழகு கவிதையின் ஓசை நயம் மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)**




இக்கவிதையின் ஓசை நயங்களுள் ஒன்றாக **எதுகை** சிறந்து விளங்குகிறது. எதுகை என்பது கவிதையின் தொடக்கச் சீர்களின் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றி வருவதாகும். எடுத்துக்காட்டாக, முதல் கண்ணியில்,

வெள்ளி முளைப்பினிலே – அழகு
துள்ளுது வான்பரப்பில்! – சிறு
புள்ளின ஓசையிலே – அழகு
பொங்கி வழியுதடி!

‘வெள்ளி - புள்ளின’ எனும் சீர்களில் முதலெழுத்துகளான ‘வெ-பு’ அளவால் குறிலாகவும் இரண்டாம் எழுத்தான ‘ள்’ ஓசையால் ஒன்றியும் வந்துள்ளன.

மேலும், இக்கவிதையின் ஓசை நயங்களுள் ஒன்றாக **மோனையும்** சிறந்து விளங்குகிறது. மோனை என்பது சீர்களின் முதலெழுத்து ஓசையால் ஒன்றி வருவதாகும். எடுத்துக்காட்டாக, நான்காம் கண்ணியில்

தாமரை மொட்டுக்குள்ளே – அழகு
தங்கிக் கிடக்குதடி! – கதிர்

எனும் அடியில் ‘தாமரை - தங்கி’ எனும் சீர்களில் ‘தா - த’ எனும் முதலெழுத்துகள் ஓசையால் ஒன்றி வந்துள்ளன.

இதனைத்தவிர, இக்கவிதையின் ஓசை நயங்களுள் ஒன்றாக **சந்தமும்** சிறந்து விளங்குகிறது. சந்தம் என்பது சொற்களிலுள்ள ஒலிக்கூறுகள் அல்லது ஓசைப்பகுதிகள் ஒரே தாள அளவுக்குப் பொருந்தி அமைவது ஆகும். எடுத்துக்காட்டாக, மூன்றாம் கண்ணியில், ‘சேவல் – ஆவல்’ எனும் சீர்களின் எல்லா எழுத்துகளும் ஒரே தாள அளவுக்குப் பொருந்தி வந்துள்ளன.

**வினா 11: (i) காலை அழகு கவிதையின் அணி நயம் மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)**




காலை அழகு எனும் இக்கவிதையில் **திரிபு அணி** சிறந்து விளங்குகிறது. திரிபு அணி என்பது சீர்களில் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க, மற்றவை எல்லாம் அதே எழுத்துகளாக ஒன்று வருவது ஆகும். எடுத்துக்காட்டாக, மூன்றாம் கண்ணியில்,

தாமரை மொட்டுக்குள்ளே – அழகு
தங்கிக் கிடக்குதடி! – கதிர்
சாமரை வீச்சினிலே – விரிந்து
சஞ்சலம் போக்குதடி!

எனும் அடியில், 'தாமரை – சாமரை' எனும் சீர்களின் முதல் எழுத்துகளான 'தா – சா' மட்டும் வேறுபட்டிருக்க மற்றவை எல்லாம் அதே எழுத்துகளாக ஒன்று வந்துள்ளன.

இதுமட்டுமல்லாது, **தற்குறிப்பேற்ற அணியும்** இக்கவிதைக்கு நயம் சேர்த்துள்ளது. தற்குறிப்பேற்ற அணி என்பது அஃறிணையில் உயர்திணைபோல் தன் கருத்தை ஏற்றுதல் ஆகும். சான்றாக, மூன்றாம் கண்ணியில்,

**சேவல் அழைப்பினிலே** – அழகு
சிந்தையை அள்ளுதடி!

எனும் வரிகளில் கொக்கரிக்கும் அஃறிணையான சேவல், மனிதர்கள் போன்று அழைப்பதாகக் கவிஞர் தன் கருத்தை ஏற்றியுள்ளார்.

தொடர்ந்து, **உருவக அணியும்** இக்கவிதையின் நயங்களுள் ஒன்றாக விளங்குகிறது. உருவக அணி என்பது உவமையையும் பொருளையும் வேற்றுமை இன்றி ஒன்றெனக் கொள்ளுதல் ஆகும். உதாரணமாக, நான்காம் கண்ணியில்,

கதிர் சாமரை வீச்சினிலே – விரிந்து
சஞ்சலம் போக்குதடி!

எனும் வரிகளில் சூரிய ஒளிக்கதிர் சாமரமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

**வினா 11: (i) காலை அழகு கவிதையின் <u>நயங்கள்</u> மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)**

இக்கவிதையின் நயங்களுள் ஒன்றாக **<u>மோனை</u>** சிறந்து விளங்குகிறது. மோனை என்பது சீர்களின் முதலெழுத்து ஓசையால் ஒன்றி வருவதாகும். எடுத்துக்காட்டாக, நான்காம் கண்ணியில்

தாமரை மொட்டுக்குள்ளே – அழகு
தங்கிக் கிடக்குதடி! – கதிர்

எனும் அடியில் 'தாமரை - தங்கி' எனும் சீர்களில் 'தா - த' எனும் முதலெழுத்துகள் ஓசையால் ஒன்றி வந்துள்ளன.

இதனைத்தவிர, இக்கவிதையின் நயங்களுள் ஒன்றாக **சந்தமும்** சிறந்து விளங்குகிறது. சந்தம் என்பது சொற்களிலுள்ள ஒலிக்கூறுகள் அல்லது ஓசைப்பகுதிகள் ஒரே தாள அளவுக்குப் பொருந்தி அமைவது ஆகும். எடுத்துக்காட்டாக, மூன்றாம் கண்ணியில், 'சேவல் – ஆவல்' எனும் சீர்களின் எல்லா எழுத்துகளும் ஒரே தாள அளவுக்குப் பொருந்தி வந்துள்ளன.

இக்கவிதையில் **திரிபு அணி** சிறந்து விளங்குகிறது. திரிபு அணி என்பது <u>சீர்களில் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க, மற்றவை எல்லாம் அதே எழூத்துகளாக ஒன்று வருவது</u> ஆகும். எடுத்துக்காட்டாக, மூன்றாம் கண்ணியில்,

<u>தாமரை</u> மொட்டுக்குள்ளே – அழகு
தங்கிக் கிடக்குதடி! – கதிர்
<u>சாமரை</u> வீச்சினிலே – விரிந்து
சஞ்சலம் போக்குதடி!

எனும் அடியில், 'தாமரை – சாமரை' எனும் சீர்களின் முதல் எழுத்துகளான 'தா – சா' மட்டும் வேறுபட்டிருக்க மற்றவை எல்லாம் அதே எழுத்துகளாக ஒன்று வந்துள்ளன.

**வினா 11: (ii)** காலை அழகு கவிதை உனக்குள் ஏற்படுத்திய **<u>தாக்கம்</u>** மூன்றனை விளக்கி எழுதுக. (10 புள்ளி)




காலை அழகு எனும் இக்கவிதை எனக்குள் பல **தாக்கங்களை** உண்டாக்கி உள்ளது. **சூரியன் உதிக்கும் பொழுது காணும் காலை நேரக் காட்சி இன்பத்தை அளிக்க வல்லது.** வானம் இயற்கை அன்னை தீட்டிய எழில் ஓவியமாக விளங்குகிறது. சூரியனின் ஒளிக்கதிர், பறவைகளின் கீச்சொலி, சோலையின் கலகலப்பு என விடியலின் ஒவ்வொரு அழகிலும் என் **மனம் மயங்குகிறது.** <u>இயற்கை அன்னையின் அருட்கொடையில் முகிழ்த்து இன்பம் பெறும் அதே வேளையில் அதனைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற உறுதியான எண்ணமும் என்னுள் தளிர் விட்டுள்ளது.</u>

**கருத்து**

**உணர்வு**

**தீர்வு**

மேலும், **சூரிய ஒளிப்பட்டுத் தாமரை மொட்டுகள் மலரும்போது அதன் அழகு மனக்கலக்கத்தைப் போக்குகிறது.** இன்றைய அவசர உலகில் இயந்திரத் தன்மையும் பரபரவெனச் செயலாற்றிக் கொண்டிருக்கும் மனிதர்களுக்கு மன இறுக்கம் ஏற்படுவது இயல்பே. இத்தகைய மன இறுக்கத்தைப் போக்கும் அருமருந்தாக இயற்கை விளங்குகிறது என்பதை நான் உணர்கிறேன். எனவே, தாயைப் போல அரவணைக்கும் இயற்கையோடு ஒன்றி வாழ்வதைக் கட்டாயமாக்கிக் கொள்ள முடிவெடுத்துள்ளேன்.

**கருத்து**

**உணர்வு**

**தீர்வு**

இதுமட்டுமல்லாது, **குடும்பப் பொறுப்புகளைச் செயல்படுத்தத் தொடங்கும் பெண்களின் மும்முரம் காலைப் பொழுதின் அழகிற்கு மெருகேற்றுகிறது.** பெண்கள் வீட்டின் கண்கள் என்பர். ஆக்கச் சக்தியாக விளங்கும் பெண்கள் தங்கள் கடமைகளைத் தட்டிக் கழிக்காமல் பொறுப்புணர்வோடு செயல்படும் முறை **என்னைப் பெருமையடையச் செய்கிறது.** <u>எனவே, தாய், தமக்கை, மனைவி எனப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டுள்ள பெண்மையைத் தாழ்த்தாது என்றும் போற்றி மதிக்க வேண்டுமென நான் முடிவெடுத்துள்ளேன்.</u>

**கருத்து**

**உணர்வு**

**தீர்வு**

**வினா 11: (ii)** காலை அழகு கவிதையின் **<u>படிப்பினை</u>** மூன்றனை விளக்கி_எழுதுக. (10 புள்ளி)

**இயற்கையை இரசித்து வாழ வேண்டும்** என்பது இக்கவிதையின் **முக்கியப் படிப்பினையாகும்.** சூரியனின் ஒளிக்கதிர், பறவைகளின் கீச்சொலி, சோலையின் கலகலப்பு என விடியலின் ஒவ்வொரு அழகும் நம் மனத்தை மயக்க வல்லது. இயற்கை தரும் அழகு மகிழ்ச்சியில் நாம் அன்றையப் பொழுதை உற்சாகமாகத் தொடங்கலாம். ஆனால், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் இயற்கையைவிட்டு நழுவி செயற்கை பக்கம் சென்றுவிட்ட மனிதன் தனது இரசிப்புத்தன்மையை இழந்துள்ளான். அதனாலேயே இயற்கையுடன் இயைந்து வாழ மறுக்கிறான். **எனவே, வாழ்க்கையில் நிம்மதியும் இன்பமும் பெருக வேண்டுமெனில் இயற்கையை இரசித்து வாழ நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.**

**படிப்பினை**

**விளக்கம்**

**வலியுறுத்தும் வாக்கியம்**

மேலும், **இயற்கையைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்** என்பது இக்கவிதை உணர்த்தும் மற்றொரு படிப்பினையாகும். மனிதனின் இன்ப வாழ்விற்காகவே இயற்கை அன்னை பல அருட்கொடைகளை வாரி வழங்கியுள்ளாள். மேம்பாடு எனும் போர்வையில் இயற்கையைச் சீரழிக்கும் எந்தச் செயலையும் செய்யாமல் அதைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் நாம் இறங்க வேண்டியது முக்கியம். **எனவே, அடுத்த தலைமுறைக்கு இயற்கையை அழியாச் சொத்தாக விட்டுச் செல்ல நாம் இயற்கையைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் இறங்க வேண்டியது அவசியமாகும்.**

**படிப்பினை**

**விளக்கம்**

**வலியுறுத்தும் வாக்கியம்**

இதுமட்டுமல்லாது, **இயற்கையை மன இறுக்கத்தைப் போக்கும் ஊடகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்** என்ற படிப்பினையையும் நாம் பெறலாம். இன்றைய அவசர உலகில் இயந்திரத் தன்மையும் பரபரவெனச் செயலாற்றிக் கொண்டிருக்கும் மனிதர்களுக்கு மன இறுக்கம் ஏற்படுவது இயல்பே. இத்தகைய மன இறுக்கத்தைப் போக்கும் அருமருந்தாக இயற்கை விளங்குகிறது. **ஆகவே, தாயைப் போல அரவணைக்கும் இயற்கையை முறையாகப் பயன்படுத்திக் கொள்வது நமது கையில்தான் உள்ளது.**

**படிப்பினை**

**விளக்கம்**

**வலியுறுத்தும் வாக்கியம்**